## <u>சுருக்கம்</u>

நெடுஞ்சாலை – கோவை மாநகரில் செம்மொழி பூங்கா அமையவுள்ள காந்திபுரம் பகுதியில் போக்குவரத்து நெரிசலை களையும் பொருட்டு குறுக்கு சாலை (ம) நூறடி சாலைகளை இணைக்கும் வகையில் சுரங்கப் பாலம், சுழற்பாலம் மற்றும் பாதசாரிகள் சுரங்க நடைபாதையுடன் உயர்மட்ட மேம்பாலம் அமைத்தல் பணி – நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.எஸ்.2) துறை

அரசாணை (டி) எண்:240 நாள்: 11.12.2010

கார்த்திகை 25, திருவள்ளுவராண்டு 2041

படிக்கவும்:

1) முதலமைச்சரின் செயலாளர் (கே.ஆர்) முதலமைச்சர் அலுவலகக் குறிப்பு நாள் 29.06.2010.
2) தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை, கடித எண்.37988/திட்டம்–2/2009 நாள் 30.11.2010 மற்றும் 3.12.2010

---------

**<u>ஆணை:</u>**

கோவை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நிறைவு விழாவில் 27.06.2010 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புக்களில் கீழ்க்கண்ட உயர்மட்டப் பாலப் பணியும் ஒன்றாகும்:–

**<u>அறிவிப்பு எண்.13</u>**

> ‘‘கோவையில் செம்மொழி பூங்கா அமையவுள்ள காந்திபுரம் பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் களைய குறுக்கு சாலை (Cross cut road) மற்றும் நூறு அடிச்சாலை ஆகிய சாலைகள் சத்தியமங்கலம் சாலையைக் கடக்கக் கூடிய சந்திப்புகளில் ஒரு கிலோ மீட்டருக்கு மேல் நீளமுள்ள பெரும் மேம்பாலம் ஒன்று சுமார் ரு.100 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்’’.

2. மேலே படிக்கப்பட்ட அறிவிப்பு குறித்து தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை அவர்களிடம் அறிக்கை கோரப்பட்டது. அவர் தன்னுடைய அறிக்கையில் ‘‘காந்திபுரம் பேருந்து நிலையம் அருகே புதிதாக அமைக்கப்படவுள்ள இந்த உயர்மட்ட மேம்பாலமானது கோவை கிராஸ்கட் சந்திப்பு மற்றும் நூறடி சந்திப்புகளை இணைப்பதாக அமைக்கப்படவுள்ளது என்றும் இந்த மேம்பாலமானது சுரங்கபாலம், சுழற்பாலம் மற்றும் பாதசாரிகள் சுரங்க நடைபாதையுடன் கூடிய வகையில் உள்ளடக்கிய உயர்மட்ட மேம்பாலமாக அமையவுள்ளது என்றும், டாக்டர். நஞ்சப்பா சாலையில் (சத்தியமங்கலம் சாலை) அமையவுள்ள இந்த உயர்மட்ட மேம்பாலமானது பிரதான சந்திப்புகளான கிராஸ்கட் சந்திப்பு, நூறடி சந்திப்பு மற்றும் காந்திபுரம் பேருந்து நிலையத்தின் நுழைவு மற்றும் வெளியேறும் வாயில்களை இணைப்பதாக இருக்கும் என்றும், இந்த உயர்மட்ட மேம்பாலமானது சத்தியமங்கலம் சாலை மற்றும் மேம்பாலத்தைச் சுற்றியுள்ள சந்திப்புகளில் தடையற்ற போக்குவரத்திற்கு வழி வகுக்கும்’’ என்று தெரிவித்துள்ளார்.

3. மேலும் உயர்மட்ட மேம்பாலம் அமைப்பது தொடர்பாக திருவாளர்கள் எஸ்.என்.போப் அண்டு அசோசியேட்ஸ் அவர்களால் தயாரிக்கப்பட்ட செய்யத்தக்கமைக்கான அறிக்கையின் அடிப்படையில் பின்வருமாறு கருத்துரு உருவாக்கப்பட்டுள்ளதாக தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை தெரிவித்துள்ளார்.

**1. நூறடி சந்திப்பு – மேம்பாலம்**

இச்சந்திப்பில், நெரிசல் நேர போக்குவரத்து செறிவு காலையில் 12983/பி.சி.யு., மாலையில் 13318/பி.சி.யு–ஆகவும், டாக்டர். நஞ்சப்பா சாலையில் 3500 பி.சி.யு. (ஒரு மணி காலம்) உள்ளது. எனவே, இருபக்கமும் ஆறுவழித்தட நேர்பாதையுடன் கூடிய உயர்மட்ட மேம்பாலம் அமைப்பது அத்தியாவசியமாகிறது. ஆனால், டாக்டர். நஞ்சப்பா சாலையில், ஜி.பி. சந்திப்பு மற்றும் நூறடி சந்திப்பு ஆகியவற்றிற்கு இடையே அதிகபட்ச வழித்தட அகலம் 19 மீட்டரும், கிராஸ்கட் சாலை சந்திப்பிலிருந்து பார்க்கேட் சந்திப்பு வரையிலான பகுதியில் அதிகபட்ச வழித்தட அகலம் 25 மீட்டர் மட்டுமே உள்ளது. இவ்வாறு டாக்டர் நஞ்சப்பா சாலையில் போதுமான சாலை அகலம் இல்லாத காரணத்தால் மேற்கொண்டு நிலம் கையகப்படுத்தபடாமல் ஆறு வழித்தட உயர்மட்ட மேம்பாலம் அமைப்பது சாத்தியமில்லை என்பதால், இந்த இடத்தில் நான்கு வழித்தட உயர்மட்ட மேம்பாலம் அமைப்பது மட்டுமே சாத்தியமானதாகும்.

**கீழ்ப்பாலம்**

டாக்டர் நஞ்சப்பா சாலையில் அமையவுள்ள உயர்மட்ட மேம்பாலத்தினால் நூறடி சாலையிலிருந்து வரும் 25% விழுக்காடு போக்குவரத்தானது, மேம்பாலத்தின் அடியில் அமையவுள்ள கீழ்ப்பாலத்தின் வழியே செல்வதற்கு சாத்தியப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 50% விழுக்காடு போக்குவரத்தினை ஏற்கனவே உள்ள சாலையை அகலப்படுத்தியும், வலுப்படுத்தியும், சாலை சுழல் நடுத்திட்டு (rotary) அமைத்தும் எளிதான போக்குவரத்தை சாத்தியப்படுத்தலாம்.

**2) கிராஸ்கட் சாலை சந்திப்பு**

இச்சந்திப்பில் தேவைப்படும் இடங்களில் உள்வரும் மற்றும் வெளியேறும் போக்குவரத்திற்கு தனித்தனியாக சறுக்குப்பாதைகள் அமைத்தல், டாக்டர் நஞ்சப்பா சாலையின் தெற்கு முனையில் அமையவுள்ள சுற்றுப்பாதையில் “யு” வடிவில் திரும்பிச் சென்று, அதே சாலையின் மேற்கு முனையில் கிராஸ்கட் சாலை, சத்தி சாலை மற்றும் நஞ்சப்பா சாலை சந்திப்பு ஆகிய நான்கு திசைகளிலும் செல்லும் வகையிலான சுரங்கப் பாதையை அமைத்தல். மூன்று பேருந்து நிலையங்களையும் இணைக்கும் வகையிலான பாதசாரிகள் சுரங்க நடைபாதை அமைத்தல்.

**3) சமதளத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்பாட்டுப் பணிகள்**

உயர்மட்ட மேம்பாலத்தின் இருபக்கமும் பார்க்கேட் சந்திப்பு முதல் குறுக்கு சந்திப்பு வரையிலான சாலையை நான்கு வழித்தடமாக அகலப்படுத்துதல். குறுக்கு சந்திப்பு மூலம் மேம்பாலத்தின் இறுதிப் பகுதியைத் தாண்டி ஜி.பி. சந்திப்பு வரையுள்ள சாலையை மூன்று வழித்தடமாக அகலப்படுத்துதல். டாக்டர். நஞ்சப்பா சாலையையும் – அவினாசி சாலையையும் இணைக்கும் வகையில், நான்கு வழித்தட சாலை அமைத்தல் மற்றும் வடிகால்கள் அமைத்தல், கம்பி வடங்கள் பாதை (Cable Duct) அமைத்தல் மற்றும் பாதசாரிகள் நடைபாதை அமைத்தல்.

4. இப்பாலப்பணிக்கு பின்வரும் இனங்களை உள்ளடக்கிய பணிகளைச் செயல்படுத்திட தோராயமாக ரூ.148 கோடி செலவாகும் என்றும் இதனை புதிய பணிகள் திட்டத்தின் கீழ் செயல்படுத்திட நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை அரசை கோரியுள்ளார்.

| மொத்த மதிப்பீடு | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|
| 1) பிரதான உயர்மட்ட மேம்பாலம் (1090 மீ) | 63.52 |
| 2) 100 அடி சாலை சந்திப்பிலுள்ள கீழ்ப்பாலம் | 15.48 |
| 3) பாதசாரிகள் சுரங்க நடைபாதை | 4.50 |
| 4) தற்போதுள்ள 2500 மீட்டர் சாலையினை அகலப்படுத்தி பலப்படுத்துதல் மற்றும் பேருந்து நிலையத்தை சுற்றி புதிய சாலை அமைத்தல் | 9.30 |
| 5) வடிகால், கம்பிவடப்பாதை மற்றும் நடைபாதை (3100 மீட்டர்) அமைத்தல் | 6.20 |
| 6) "யு" வடிவில் திரும்புவதற்கு மேம்பாலம் அமைத்தல் (440 மீட்டர்) அல்லது மேம்பாலத்தை நீட்டித்தல் | 10.56 |
| 7) சாலையில் மின் வசதிகள் ஏற்படுத்துதல் | 0.37 |
| 8) சாலை சுழல் நடுத்திட்டு மற்றும் சாலைச் சந்திப்பு மேம்பாடு | 2.00 |
| 9) சாலை சமிக்ஞைகள் மற்றும் சாலைக் குறியீடுகள் | 0.20 |
| 10) நிலம் கையகப்படுத்துதல் | 20.00 |
| 11) சாலையை அழகுப்படுத்துதல் | 2.00 |
| 12) மின்கம்பங்கள், குடிநீர் / கழிவுநீர் குழாய்கள் போன்றவற்றை இட மாற்றம் செய்தல் | 10.00 |
| 13) இதர செலவினங்கள், தரக்கட்டுப்பாடு, சிறு மற்றும் மேற்பார்வை செலவினங்கள் | 3.90 |
| **மொத்தம்** | **148.00** |

5. மேலும் உயர்மட்டப் பாலம் அமைப்பது தொடர்பாக தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) , நெடுஞ்சாலைத்துறை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

காந்திபுரம் மேம்பாலம் நில எடுப்பு பணிக்கு 7412 ச.மீ. (அல்லது ) 1.83 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. இப்பாலப்பணிக்கு ஆலோசகரால் விரிவான திட்ட அறிக்கை, (DPR) மற்றும் நில திட்ட அட்டவணைகள் (LPS) அளிக்கப்பட்ட பிறகு சரியான நில எடுப்பு விவரங்கள் மற்றும் தேவைப்படும் தொகை விபரங்களானது நில நிர்வாக ஆணையருக்கு அனுப்பி அவரின் ஒப்புதல் பெறப்படும். இதர செலவினங்கள், தரக்கட்டுப்பாடு, சிறு மற்றும் மேற்பார்வை செலவினங்களுக்கு தோராயமாக ரூ.3.90 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், நடைமுறையில் உள்ள

வழிகாட்டுதல்களின்படி, தரக்கட்டுப்பாட்டிற்கு (Quality Control) 1%-ரூ.1.10 கோடி, இதர செலவினங்கள், சிறு மற்றும் மேற்பார்வை செலவினங்களுக்கு (Contingencies and Petty Supervision Charges) 2.50%-ரூ.2.80 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், இப்பாலப்பணி தேசிய நெடுஞ்சாலையில் (NH-209) அமைய உள்ளதால் தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) மூலம் மத்திய தரைவழி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்திடமிருந்து (MORT&H) தடையின்மைச் சான்றிதழ் பெற கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை தெரிவித்துள்ளார்.

**6.** மேலே பத்தி 4–ல் படிக்கப்பட்ட தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை செயற்குறிப்பானது அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, அவரின் செயற்குறிப்பினை ஏற்று, கோவை மாநகரம் செம்மொழி பூங்கா அமையவுள்ள காந்திபுரம் பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் களையும் பொருட்டு குறுக்கு சாலை மற்றும் நூறடி சாலைகளை இணைக்கும் வகையில் சுரங்கப்பாலம், சுழற்பாலம் மற்றும் பாதசாரிகள் சுரங்க நடைப்பாதையுடன் ஒரு உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணியினை புதிய பணிகள் திட்டத்தின் கீழ் செயல்படுத்திடுவதற்கு ரூ.**148** கோடிக்கு (ரூபாய் நூற்று நாற்பத்தெட்டு கோடி மட்டும்) நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

7. மேலே ஒப்புதலளிக்கப்பட்ட உயர்மட்டப் பாலப் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை மற்றும் நில திட்ட அட்டவணை (LPS) பெற்ற பிறகு நில எடுப்பு விவரங்கள் மற்றும் தேவைப்படும் தொகை குறித்த விவரங்களை நில நிர்வாக ஆணையருக்கு அனுப்பி ஒப்புதல் பெறுமாறு தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை அறிவுறுத்தப்படுகிறார்.

**8.** இப்பணிக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> “ **5054 சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – 03 மாநில நெடுஞ்சாலைகள் – 337–சாலைப் பணிகள் பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் –II – மாநில திட்டம் – JI- மாநில நெடுஞ்சாலைகளுக்கான விரிவான சாலை அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – 16 பெரும்பணிகள் (து.தொ.கு.5054–03–337–JI– 1602)**

7. மேலே பத்தி **6–** ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் “ புதுப்பணிகள் (New Service)” குறித்ததாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் வகையில், இத்திட்டத்திற்கான ஆரம்பச் செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு –செலவு பொது–1)த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு, வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு–செலவு பொது–1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை, சென்னை –**5** அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

8. மேலும் இச்செலவினம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டுவரும் பொருட்டு, இவ்வாண்டின் இறுதி துணை மதிப்பீட்டில் ( Final Supplementary Estimates) சேர்த்திட, இப்பணிக்கான மொத்த நிதியொதுக்கீடு, இந்த நிதியாண்டில் பணிகளின் செயலாக்கத்திற்காக தேவைப்படும் செலவினம் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய விளக்கக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (வரவு–செலவு பொது–1) துறைக்கு அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

9. இவ்வரசாணை நிதித் துறை இசைவுடன், அத்துறையின் அ.சா.எண்.71227/பொ.ப.1/2010–1 , நாள் : 10.12.2010 மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண். 1514 (ஆயிரத்து ஐநூற்று பதினான்கு) ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ.சந்தானம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர் தேசிய நெடுஞ்சாலை, சென்னை–5
கருவூல அலுவலர் கோயம்புத்தூர்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை –5/35.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35

நகல்
நிதித் (பொ.ப.I/வ.செ.பொ.I/வ.செ.பொII) துறை, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் நிதி அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர் சென்னை–9.
செயலாளர், நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறையின் தனிச்செயலர், சென்னை–9.
நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை (எச்.எப்.) பிரிவு சென்னை –9.
நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை திட்டப் பிரிவுகள், சென்னை –9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.